**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No.** 33/2017

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுதா | கணவர் பெயர் | : ----- |
| தகப்பனார் பெயர் | மாணிக்கம் | வயது | : 40 |
| கிராமம் | நங்கவள்ளி | நாள் | : 13.11.2025 |
| தாலுகா | மேட்டுர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் வாதி திருக்கோவிலில் செயல் அலுவலராக பணி செய்து வருகிறேன். வாதி திருகோவில் சார்பாக 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 23.12.2014 ம் தேதிய பட்டா எண்.333 உண்மை நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 01.09.2016 ம் தேதியிட்ட முந்தைய தக்கார் நியமன உத்தரவு உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 07.08.2013 ம் தேதியிட்ட முந்தைய தக்கார் பணி நியமன உத்தரவு உண்மை நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 26.01.2017 ம் தேதியில் திருகோவில் எழுத்தர் தக்காருக்கு கொடுத்த புகார் அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 26.01.2017 ம் தேதியில் திருக்கோவில் தக்கார் நங்கவள்ளி காவல் நிலையத்தில கொடுத்த புகார் மனு கை நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. நங்கவள்ளி காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு உண்டான 26.01.2017 ம் தேதிய புகார் மனு ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. தாவா சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் (எண்ணிக்கை 7) மற்றும் அதன் ரசீது அசல் **வா.சா.ஆ 7** ஆகும்.

(கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு 15.12.2025 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.